DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 54/2025 LW– 7 PW– 6

| | | |
|---|---|---|
| Name | : | திரு. கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : | முருகேசன் |
| Village | : | சார்பு ஆய்வாளர் |
| Taluk | : | தாலுகா காவல் நிலையம் |
| District | : | திண்டுக்கல் |
| Age | : | 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of February 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் பகல் 12:20 P.M. – 1:20 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி அசோக் என்பவரை தெரியும். கடந்த 09.09.2024ம் தேதி 15.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலையப் பொறுப்பில் இருந்தபோது ரகசிய தகவலாளி நிலையத்தில் நேரில் ஆஜராகி கூறிய தகவலை 15.05 மணிக்கு தனியறிக்கையாக பதிவு செய்தேன். **(தனி அறிக்கை அ.த.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்பு அதை பொதுநாட் குறிப்பில் பதிவு செய்தேன். எனக்கு கிடைத்த தகவலை எனது மேலதிகாரியான காவல் ஆய்வாளர் அவர்கள் வெளி அலுவலில் இருந்த காரணத்தினால் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று என்னுடன் நிலைய அலுவலில் இருந்த

தலைமைக் காவலர் திரு.கிருபாகரன் (1307) மற்றும் முதல் நிலைக் காவலர் திரு.ராபர்ட் லாரன்ஸ் ஆகியோர்களுடன் புறப்பட்டு போதைப் பொருள் குற்றத் தடுப்பு சம்பந்தமாக ரோந்து செய்து 15.45 மணிக்கு பரளி, தேத்தாம்பட்டி அருகே சென்றபோது எனது ரகசிய தகவலாளி மதுபாட்டில்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை அடையாளம் காட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அவர் அடையாளம் காட்டிய இடமான பரளி தேத்தாம்பட்டியில் அசோக், த/பெ.வில்லி என்பவரின் வீட்டின் எதிரே உள்ள செடியின் புதரில் பிளாஸ்டிக் சாக்குமூட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்து பிளாஸ்டிக் சாக்கை பிரித்து பார்த்தபோது அதில் பாண்டிச்சேரி மது வகைகளான 180 ML அளவு கொண்ட புளு கிரேப் பிராந்தி 10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns பிராந்தி 21 பாட்டில்கள் மற்றும் லேபிள்கள் கிழிக்கப்பட்டும், மூடி திறக்கப்பட்டு மூடிய நிலையில் சீல் இல்லாமல் இருந்த 180 ML அளவு கொண்ட மது பாட்டில்கள் இரண்டும் இருந்தன.

2) மேற்படி மதுபாட்டில்களை மறைத்து வைத்திருந்தது பற்றி அக்கம் பக்கம் விசாரித்தபோது எதுவும் தெரியாது என்று கூறிவிட்டனர். வீட்டின் முன்பு பாட்டில்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த அசோக் என்பவரின் வீட்டில் யாரும் இல்லை. லேபிள்கள் கிழிக்கப்பட்டு மூடி திறந்த நிலையில் இருந்த 2 மதுபாட்டில்களை எடுத்து நுகர்ந்து பார்த்தபோது அதில் கொடிய நெடியுடன் கூடிய விஷத்தன்மை உள்ள வாசனை வந்தது. மேற்படி மதுவை குடித்தால் மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடும் என்பதாலும், லேபிள்கள் கிழிக்கப்பட்டும், மூடி திறந்த நிலையிலும் விற்பனைக்கு வைத்திருந்த 2 பாட்டில்களை பகுப்பாய்வுக்கு அனுப்புவதற்காக வெள்ளைநாடாவால் சுற்றப்பட்டு போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மேலும், பாண்டிச்சேரி மதுபாட்டில்களை வாங்கி வந்து தமிழ்நாட்டில் விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்த மதுபாட்டில்களான வழக்கு சொத்துக்களை 16.00 மணிக்கு அந்த இடத்தில் வைத்து கைப்பற்ற தனி நபர் சாட்சியாக யாரும் முன் வராததால் என்னுடன் வந்த

போலீசாராகிய கிருபாகரன் மற்றும் ராபர்ட் லாரன்ஸ் ஆகியோர்களை சாட்சியாக நியமித்து அவர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **(அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 17.30 மணிக்கு நிலையம் வந்து மதுபாட்டில்களை விற்பனைக்கு அவரது வீட்டின் முன்பு செடி புதரில் மறைத்து வைத்திருந்த அசோக் என்பவர் மீது நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 பிரிவு 4(1–A) TNP Act ஆக வழக்கு பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தனி அறிக்கையையும், முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நத்தம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், மற்றொரு நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் புகார்தாரரான கிருபாகரன் மற்றும் ராபர்ட் லாரன்ஸ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) பின்னர் இவ்வழக்கின் எதிரியை கைது செய்ய வேண்டி தேடி வந்த நிலையில் 12.09.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு பரளி, தேத்தாம்பட்டியில் உள்ள அவரது வீட்டின் அருகே வைத்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், கைது பற்றிய தகவலை அவரது உறவினர்களுக்கு தெரிவித்தும் பின்பு எதிரி எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ ஆசை வார்த்தையோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தலைமைக் காவலர் அழகுராஜ் மற்றும் முதல் நிலைக் காவலர் ஜெரால்டு ராஜா ஆகியோர் முன்னிலையில் 8.15 மணிக்கு பதிவு செய்தேன். **(ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.8ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் எதிரியை தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அழகுராஜ்,

ஜெரால்டு ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை கனம் நத்தம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் படிவம் 91 மூலம் ஒப்படைத்து ஆர்.பி.ஆர்.எண்.67/2024ஆக பெற்றுள்ளேன். **(படிவம் 91 <u>அ.த.சா.ஆ.9</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (வழக்கு சொத்துக்களான மதுபாட்டில்கள் மொத்தம் 33ல் 31 பாட்டில்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், மூடி திறந்த நிலையில் இருந்த பாட்டில்கள் தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டும் உள்ளது – அ.சா.பொ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி மதுபாட்டில்களின் புகைப்படங்கள் மற்றும் பிரிவு 65–B IEA சான்றிதழுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **(பிரிவு 65–B IEA சான்றிதழ் <u>அ.த.சா.ஆ.10</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6) பின்னர் வெள்ளைநாடாவால் சுற்றப்பட்டு போலீஸ் பட்டன் சீல் வைக்கப்பட்ட 2 மதுபாட்டில்களை பகுப்பாய்விற்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கனம் நீதிமன்றம் மூலம் பெண் காவலர் ஜோதிலெட்சுமி என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். 04.02.2025ம் தேதி மேற்படி ஆய்வகத்திலிருந்து வரப்பெற்ற தபாலை பார்வையிட்டு அதில் They are coloured flavoured alcohol and free from methyl alcohol and Atropine என சான்று அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கை வழங்கிய திரு.குருசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வகத்திற்கு தபாலை கொண்டு சென்ற பெண் முதல் நிலைக் காவலர் திருமதி. ஜோதிலெட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மதுரை வட்டார தடயவியல் ஆய்வறிக்கை <u>அ.த.சா.ஆ.11</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இவ்வழக்கின் சட்டப் பிரிவை 4(1–A) TNP Act என்பதிலிருந்து 4(1)(a) TNP Actஆக மாறுதல் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை <u>அ.த.சா.ஆ.12</u>ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 04.02.2025ம்

தேதி சட்ட பிரிவு 4(1)(a) TNP Actன் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7) முதல் தகவல் அறிக்கையில் 9/9/2024 ஆம் தேதி தகவல் கிடைத்த நேரம் 17:30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த நேரம் 09.09.2024ம் தேதி 15.45 மணி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தகவல் கிடைத்த பிறகுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு நான் சென்றேன் என்றால் 15.45 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் யாரும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளதா என்றால் சுற்றி வீடுகள் உள்ளது. பிளாஸ்டிக் சாக்கில் மதுபான பாட்டில்கள் இருந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். பிளாஸ்டிக் சாக்கை வழக்கு பொருளாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

8) வழக்கில் புகார் கொடுத்தது யார் என்றால் Suo motu Case. பொதுவாக கிராமத்திற்குள் பிரச்சனை என்றால் கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் சொல்ல வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் வழக்கு சங்கதிகளை பொறுத்து தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். காவல் ஆணை எண் 617 ன் படி கிராமத்தில் பிரச்சனை ஏற்பட்டால் கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று விதி உள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

9) பாண்டிச்சேரியில் இருந்து 150 மதுபான பாட்டில்கள் காரில் கொண்டு வந்ததாக எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாண்டிச்சேரி மாவட்டத்தில் உள்ள சோதனை சாவடிகளை கடந்துதான் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் பாண்டிச்சேரியில் இருந்து கொண்டு வரும் தடை செய்யப்பட்ட மதுபான பாட்டில்களை கொண்டு வரும் பொழுது தமிழ்நாட்டில்

**உள்ள சோதனை சாவடிகளை கடந்துதான் கொண்டுவர வேண்டும் என்றால் சரிதான். பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட மதுபானத்தில் விஷத்தன்மை உள்ளதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சிகளை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி கிராமத்தில் வசிப்பதால் அவரை காவல் நிலைய கையிருப்பு சாட்சியாக இருக்க கேட்டதற்கு எதிரி மறுத்து விட்டதால் அவர் மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி மீது இதற்கு முன்பு இது போன்ற வழக்குகளோ, வேறு குற்ற வழக்குகளோ உள்ளதா என்றால் இல்லை. எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை

Co-Ordinater @ Court Point
(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point

Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல– சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.26 16:44:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்